FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364154

1. District : மாவட்டம் Namakkal PS: காவல்நிலையம் V&AC Year: ஆண்டு 2026 FIR No.: மு.த.அ. எண் 06/AC/2026 Date: நாள் 19.06.2026

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7(a), 7(a) r/w 12, 7-A
(ii) Act சட்டம்: (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: BNSS Sections பிரிவுகள்: 106(1)
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 18.06.2026
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 1200hrs Time to : நேரம் வரை 2130hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 19.06.2026 Time : நேரம் 1600hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol-II 19.06.2026 Time : நேரம் 1630hrs

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Computer typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 20 kms South west
Beat Number : முறைக் காவல் எண் —
(b) Address : முகவரி MVI Unit office, Transport Department Paramathi Velur, Namakkal Dt.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த காநி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tmt. K. Chitra
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr. R. Saravanam
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு Age-55
(d) Nationality : நாட்டினம் Indian
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் —
Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் Tahsildar / Deputy Inspection Cell Officer
(g) Address : முகவரி Inspection cell office, Salem, Dharmapuri, Namakkal & Krishnagiri Districts, Collectorate Salem.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) Tr. C.P. Prabhakaran, Motor Vehicle Inspector Gr.I, Unit office, Paramathi Velur, Namakkal District.
2) Tmt. P. Kalaiselvi, Superintendent, MVI Unit office, Paramathi Velur.
and 5 others [Private Individuals]

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted.

Separate sheets enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

19/06/26

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

19/06/26

15. Date & Time of despatch to the court: 19.06.2026
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 1800hrs

Name: பெயர் S.PRABHU,
Rank: நிலை ..... No. எண் .....
Inspector of Police,
V & A C, Namakkal.

நாமக்கல் மாவட்ட ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 06/AC/2026, u/s. 7(a), 7(a) r/w 12, 7-A of the Prevention of Corruption (Amendment) Act, 2018 & 106(1) BNSS-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...,

குற்றம் சாட்டப்பட்ட நபர்கள்:	இன்று 19.06.2026-ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 16.00 மணிக்கு நான் நிலைய ஆஜரில் இருந்த போது சேலம், தர்மபுரி, நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களின் துணை ஆய்வுக்குழு அலுவலர் திருமதி.K.சித்ரா அவர்கள் நாமக்கல் மாவட்ட ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் நேரில் ஆஜராகி கணினியில் தட்டச்சு செய்து கொடுத்த புகாரினை பெற்று உத்தரவுப்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்கிறேன். மேற்படி புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் K.சித்ரா, வட்டாட்சியர் / துணை ஆய்வுக்குழு அலுவலர், (சேலம், தர்மபுரி, நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள்) மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சேலம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புப்

1) திரு.C.P.பிரபாகரன், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1, பகுதி அலுவலகம் பரமத்திவேலூர், நாமக்கல் மாவட்டம்.

2)திருமதி.P.கலைச்செல்வி, கண்காணிப்பாளர், மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகம், பரமத்திவேலூர், நாமக்கல் மாவட்டம்.

3) திரு.R.இளங்கோ(வயது-52), த/பெ.ராமசாமி, கதவு எண்.2/22 பழனியப்பா ஆயில் மில் தெரு, பரமத்தி (PO), பரமத்தி (TK), நாமக்கல் மாவட்டம்.

4) திரு.V.R.பழனிசாமி (வயது-49), த/பெ.ராமன், கதவு எண்.3/88, வில்லிபாளையம், வில்லிபாளையம் அஞ்சல், பரமத்தி (TK), நாமக்கல் மாவட்டம்.

5) திரு.N.சுப்பிரமணியம் (வயது-46/2026), த/பெ.நல்லியண்ணன், கதவு எண்.5/9, அர்த்தனாரிபாளையம், நடந்தை அஞ்சல், பரமத்தி வேலூர் (TK), நாமக்கல் மாவட்டம்.

6) திரு.N.ராஜசேகரன் (வயது-57/2026), த/பெ.நாச்சிமுத்து, கதவு எண்.101, கண்ணிமார்கோவில் தெரு, வீரணம்பாளையம், பரமத்திவேலூர் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம்.

7) திரு.R.சுரேஷ் (வயது-55/2026), த/பெ.ராமசாமி, க.எண்.38/3, ஸ்ரீ ஜெயம் நகர், பாவடி தெரு, பரமத்தி அஞ்சல், பரமத்திவேலூர் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம்.

பிரிவு, நாமக்கல்.ஐயா, பொருள்: திடீர் தணிக்கை- நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகத்தில் 18.06.2026 பிற்பகல் திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது - கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் ஆவணம் ஒப்படைத்தல் மற்றும் நடவடிக்கை எடுக்க கோருதல்-தொடர்பாக. நான் சேலம், தர்மபுரி, நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களின் துணை ஆய்வுக்குழு அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள், புதிய வாகனப்பதிவு, பழகுநர் உரிமம் அளித்தல், ஓட்டுநர் உரிமம் அளித்தல், வாகன உரிமையாளர் பெயர் மாற்றம், வாகனத்தின் பதிவு முகவரி மாற்றம், வாகன ஆண்டு புதுப்பித்தல் சான்று வழங்குதல் போன்ற காரணங்களுக்காக பொதுமக்களிடமிருந்து நேரடியாகவும், புரோக்கர்கள் மூலமாகவும், அலுவலக நேரத்தில் 18.06.2026-ம் தேதி கையூட்டு பெறப்போவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் 18.06.2026-ம் தேதி காலை 12.00 மணிக்கு நான் மற்றும் நாமக்கல் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர், S.பிரபு மற்றும் அரசு சாட்சி திரு.A.சரவணன், உதவியாளர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், நாமக்கல் மாவட்டம் மற்றும் காவலர்கள் குழுவுடன் இணைந்து பரமத்திவேலூர் மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகத்தில் திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. இத்தணிக்கையின் போது மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் உள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் அறை மற்றும் பிற பணியாளர்கள் அறைகளில் உள்ள அலுவலர்கள் யாரும் வெளியே செல்லாவண்ணம் காவலர்களை கொண்டு காப்பு நியமிக்கப்பட்டது. பின்பு மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகத்தின் ஒவ்வொரு அறையிலும் சோதனை செய்யப்பட்டு அலுவலகத்திலிருந்த அலுவலர்கள், தனிநபர்கள் உட்பட அனைவரும் திடீர் தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டனர். இந்த திடீர் தணிக்கையானது 18.06.2026-ஆம் தேதி மதியம் 12.00 மணி முதல் இரவு 21.30 மணி வரை நடைபெற்றது. இந்த திடீர் தணிக்கையின் போது பரமத்திவேலூர் மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகத்தின் கணினி அறையில் கணினி மேசையின் கீழே குப்பைகள் போட வைக்கப்பட்டிருந்த அட்டைபெட்டி அருகில் கத்தையாக கிடந்த 500 ரூபாய் நோட்டுக்கள் 40 எண்ணிக்கை கொண்ட

யாரும் உரிமை கோரப்படாத கணக்கில் வராத பணம் ரூ.20,000/- கைப்பற்றப்பட்டது. மேலும் பரமத்திவேலூர் மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகத்தில் இருந்த தனிநபர்கள், வாடிக்கையாளர்களுக்கு தேவையான அன்றாட மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலக வேலைகளை செய்து கொடுக்கும் புரோக்கர்களாக செயல்பட்டு வந்தவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், அவர்கள் வைத்திருந்த ஆவணங்களை பார்வையிட்டும், அவர்களிடமிருந்து மேற்படி அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு கையூட்டாக கொடுப்பதற்காக கொண்டுவந்திருக்கலாம் என சந்தேகிக்கதக்க வகையில் அவர்கள் தங்கள் வசம் வைத்திருந்த கணக்கில் வராத பணம் கைப்பற்றப்பட்டது. மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.C.P.பிரபாகரன், கண்காணிப்பாளர் திருமதி.P.கலைச்செல்வி ஆகியோருக்கு கையூட்டாக கொடுப்பதற்காக ரொக்கமாக வைத்திருந்த தனி நபர்கள் மற்றும் பணத்தின் விவரங்கள் பின்வருமாறு.

வ. எண்.	தனி நபரின் விபரம்	கைப்பற்றப்பட்ட பணம்
1.	R.இளங்கோ	ரூ.4500/-
2.	V.R.பழனிசாமி	ரூ.8,500/-
3.	N.சுப்பிரமணியம்	ரூ.26,000/-
4.	N.ராஜசேகரன்	ரூ.23,500/-
5.	R.சுரேஷ்	ரூ.19,000/-

மேலும் கணினி அறையில் இருந்த Bonton நிறுவன ஒப்பந்த பணியாளர் திரு.V.நடராஜன் Data Entry Operator இருக்கையின் எதிரே ஜன்னல் ஓரத்தில் Phone Pe ACCEPTED HERE என்ற வாசகத்துடன் QR Code மற்றும் NATARAJ VENKAT என்று அச்சிடப்பட்ட பேப்பர் ஒன்று சுவரில் ஒட்டி வைக்கப்பட்டிருந்தது. அதுபற்றி திரு.நடராஜனிடம் கேட்டபோது தெரிந்த நபர்கள், உறவினர்களுக்கு ஆன்லைனில் பீஸ் கட்டுவதற்கு தான் பணம் பெறுவதற்காக அந்த QR Code-ஐ உபயோகிப்பதாக தெரிவித்தார். எனவே அவரது செல்போனில் இருந்த Phone Pe Account-ஐ சரிபார்த்தபோது அதில் இணைக்கப்பட்டிருந்த Punjab National Bank வங்கி கணக்கில் இருப்பு தொகை ரூ.1,71,843/- இருந்தது. மேலும் அந்த அறையில் திரு.இளங்கோ

அமர்ந்திருந்த இடத்திற்கு பின்புறம் உள்ள ஜன்னலில் தெர்மாகோல் அட்டையின் பின்னால் சொருகி மறைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு துண்டு சீட்டுகள் எடுக்கப்பட்டது. அதில் ஒரு சிறிய வெள்ளை நிற துண்டு சீட்டில் 16.6.26 என தேதியிட்டு அதற்கு கீழ் HW2year with1-5800 ராஜா என ஆரம்பித்து அதற்கு பின்புறம் கடைசியாக சுரே இருட்டணை LLr என எழுப்பட்டுள்ளது. மற்றொரு சிறிய வெள்ளை நிற துண்டு சீட்டில் 16.6.26 என தேதியிட்டு அதற்கு கீழ் car Reed-5- 10,000 என எழுதி ஆரம்பித்து அதன் பின்பக்கம் 62200, என எழுதி அதற்கு கீழ் MVI- 50,000 மேலும் அதற்கு கீழ் 12200 என எழுதப்பட்டிருந்தது. அந்த வெள்ளை நிற இரண்டு துண்டு சீட்டுகளும் கையூட்டு பெற்று எழுதி வைக்கப்பட்ட விவரங்களாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. எனவே பரமத்திவேலூர் மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகத்தில் திடீர் தணிக்கை மேற்கொண்டபோது மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.பிரபாகரன், கண்காணிப்பாளர் திருமதி.P.கலைச்செல்வி ஆகியோர் விதிமுறைகளுக்கு மாறாக தனிநபர்களை, மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் புரோக்கர்களாக செயல்பட்டு தங்களுக்காக கையூட்டு பெற அனுமதித்தற்காகவும், R.இளங்கோ, V.R.பழனிசாமி, N.சுப்பிரமணியம், N.ராஜசேகரன் மற்றும் R.சுரேஷ் ஆகியோர் புரோக்கர்களாக செயல்பட்டு பொது மக்களிடமிருந்து பணம் பெற்று அலுவலர்களுக்கு கையூட்டு கொடுக்க முயன்று உடந்தையாக இருந்தமைக்காகவும் மேற்படி அலுவலர்கள் மற்றும் புரோக்கர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காக, மேற்படி திடீர் தணிக்கையின் போது கைப்பற்றப்பட்ட சந்தேகத்திற்கிடமான கணக்கில் வராத பணம் ரூ.81,500/- மற்றும் எவராலும் உரிமை கோரப்படாமல் கேட்பாரற்று அலுவலகத்தில் கிடந்த பணம் ரூ.20,000/- என ஆக மொத்தம் ரூ.1,01,500/-, இரண்டு துண்டு சீட்டுகள் மற்றும் திடீர் தணிக்கையின்போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் கண்காணிப்பாளர் மற்றும் புரோக்கர்களிடம் பெறப்பட்ட வாக்குமூலங்கள் ஆகியவற்றை இத்துடன் மேல் நடவடிக்கைக்காக ஒப்படைக்கிறேன். இது தொடர்பாக சட்டப்படி தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்/19/06/26) K.சித்ரா, வட்டாட்சியர் / துணை ஆய்வு குழு அலுவலர் (சேலம், தர்மபுரி, நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள்), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சேலம்.

Sir,

I received a computer typed complaint from Tmt.K.Chitra, Tahsildar / Dy. ICO, Salem, Dharmapuri, Namakkal, Krishnagiri Districts, Collectorate, Salem on 19.06.2026 at 16.00 hrs and after getting concurrence from DVAC, Chennai. I registered a case in Namakkal Vigilance and Anti-Corruption Crime No. 06/AC/2026, u/s. 7(a), 7(a) r/w 12, 7-A of the Prevention of Corruption (Amendment) Act, 2018 & 106(1) BNSS on 19.06.2026 at 16.30 hrs against accused 1)Tr.C.P.Prabhakaran, Motor Vehicle Inspector Gr.I., Unit Office, Paramathi Velur, Namakkal District, 2) Tmt.P.Kalaiselvi, Superintendent, MVI Unit Office, Paramathi Velur and 5 others (Private Individuals) Sd/-(xxx) (S.Prabhu) 19/06/26. Inspector of Police, V&AC., Namakkal.

The original FIR along with original computer typed complaint of the complainant Tmt.K.Chitra are submitted to the Hon'ble Court of Principal District and Sessions Judge, Namakkal and remaining copies are sent to the officers concerned.

19/06/26

(S. PRABHU)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Namakkal.